# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 62 /2016**

திரு. கே. இளங்கோவன்,
த/பெ கருப்பையாப்பிள்ளை,
4/30ஏ, வெள்ளாளர் தெரு,
மேலவாளாடி,
இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி 621 218. . . . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
திருச்சி மின்பகிர்மான வட்டம் / பெருநகரம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம்,
திருச்சி– 620 020. . . . . .. எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 18–10–2016**

1. திரு. கே. இளங்கோவன், த/பெ கருப்பையாப்பிள்ளை, மேலவாளாடி, இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி, மாவட்டம், அவர்களின் 6.8.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.62/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர், துண்டிக்கப்பட்ட மின்இணைப்பு எண்.218–002–2461ஐ மீண்டும் தனக்கு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மனுவின் நகல் மேற்பார்வை பொறியாளர்/திருச்சி மின்பகிர்மான வட்டம்/பெருநகரம் அவர்களுக்கு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்குமாறு 12.8.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/திருச்சி மின்பகிர்மான வட்டம்/பெருநகரம், அவர்கள் தன்னுடைய 27.9.2016 நாளிட்ட கடிதத்தில் புகார் மனுதாரர் அவருடைய சகோதரர் திரு. ஜெயசங்கர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு மின்இணைப்பு பெற்றுக்

கொள்வதாக கிராம நிர்வாக அலுவலர்/தாளக்குடி(பொறுப்பு) அவர்கள் முன்பாக கையொப்பம் இட்டு ஒப்புதல் அளித்துள்ளார் என்று தெரிவித்து திரு. கே. இளங்கோவன் அவர்களின் 2.9.2016 நாளிட்ட கடிதத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளர் திரு. கே. இளங்கோவன் அவர்கள் அவரது சகோதரருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு தீர்வு கண்டவுடன் மின்இணைப்பை பெற்றுக்கொள்கிறேன் என்று 2.9.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளதால் அந்த கடிதத்தின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"அனுப்புநர்*
*கே. இளங்கோவன்,*
*S/o கருப்பையாப்பிள்ளை,*
*4/30A, வெள்ளாளத் தெரு,*
மேலவாளாடி*, இலால்குடி, திருச்சி–621 218.*

*பெறுநர்*
*இளமின் பொறியாளர்,*
*இயக்குதல் & காத்தல்,*
*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,*
*வாளாடி.*

*அய்யா,*

*பொருள் – மின் வாரியத்தால் துண்டிக்கப்பட்ட மின்இணைப்பை மீண்டும் வழங்கப்படுவது – சம்மந்தமாக.*

*நான் எனது சகோதரர் ஜெய்சங்கர் அவர்களின் கையெழுத்தை நான் போட்டு தவறாக மின்இணைப்பை பெற்றுவிட்டேன், என் சகோதரர் ஆட்சேபனை தெரிவித்ததால் மின்இணைப்பை துண்டிக்கப்பட்டுவிட்டது. நான் எனது சகோதரர் உடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு தீர்வு கண்டவுடன் மின்இணைப்பை பெற்றுக் கொள்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.*

*இப்படிக்கு*
*கையொப்பம் / xx xxx xxx*
*(கே. இளங்கோவன்)*

*நாள் 2.9.2016*

*<u>சாட்சி</u>*

| | |
|---|---|
| *1) கையொப்பம் / xx xxx xxx* | *S/o கிருஷ்ணண்*<br>*9750249185* |
| *2) கையொப்பம் / xx xxx xxx* | *S/o சிங்காரம்* மேலவாளாடி<br>*9688879489* |
| *3) கையொப்பம் / xx xxx xxx* | *S/o துரை,* மேலவாளாடி<br>*9965749339* |

*என் முன்பாக*
*கையொப்பம் / xx xx xx*
*Village administrative offier i/c*
*59, Thalakkudi VillageÏ Lalkudi Tk,*
*Trichy Dt.*

6. மேற்கண்ட 2.9.2016 நாளிட்ட கடிதத்தின்படி மேல்முறையீட்டாளர் திரு. கே. இளங்கோவன் அவர்கள் ஆட்சேபனை செய்யும் தன்னுடைய சகோதரருடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு கண்ட பின்பு மின்இணைப்பை பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். எனவே, மின்இணைப்பை மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனு எண்.62/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1) திரு. கே. இளங்கோவன்,
த/பெ கருப்பையாப்பிள்ளை,
4/30ஏ, வெள்ளாளர் தெரு,
மேலவாளாடி,
இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி 621 218.

2) மேற்பார்வை பொறியாளர்,
திருச்சி மின்பகிர்மான வட்டம் / பெருநகரம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம், திருச்சி– 620 020.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருச்சி மின்பகிர்மான வட்டம் / பெருநகரம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னர்புரம், திருச்சி– 620 020.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.